DR. H. V. HANDE : May I know the number of employees who are now out of job on account of this closure and whether Government have taken any steps to rehabilitate at least a few of them and give them preferential treatment in certain other employment which Government is likely to have in their employment agencies? Will the Government categorically tell us the probable date on which this factory is likely to be opened ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1,200 தொழிலாளர்கள் என்று என்னிடத்தில் தகவல் இருக்கின்றது. இப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். வேலை அற்ற தொழிலாளர்களுக்கு மூடிக்கிடக்கின்ற காலத்திலே என்ன செய்ய வேண்டும் என்பது புதிய பிரச்சினை. மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கத்தின் தொழிலாளர் துறையும் இதுபற்றி பரிசீலித்து வருகின்றன. எப்போது திறக்கப்படும் என்று கேட்டார்கள். எவ்வளவு விரைவாக திறக்க முடியுமோ, அவ்வளவு விரைவாக திறக்க முயற்சி எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 21, 22, 41, 42 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

High School building at Bhavani

* 43 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether the construction of the Government High School buildings at Bhavani, at Coimbatore District has been aken up by the Public Works Department?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பவானி அரசினர் (கழக) பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு இப்போது இருக்கும் கட்டிடத்தின் மேல், முதல் மாடி கட்டிடம் கட்ட வரைப்படமும், மதிப்பீடும் பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து அரசாங்கத்தின் ஒப்பளிப்புக்கு வந்துள்ளன. இது பரிசிலனையில் உள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : எவ்வளவு தொகைக்கு மதிப்பீடு வந்திருக்கிறது, கட்டிடம், எப்போது கட்டி முடிக்கப்படும் என்று கூற முடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே ஏற்கனவே பெண்கள் அரசினர் பள்ளியில் ஒரு அறிவியல் ஆய்வுக்கூடக் கட்டிடம் ஏற்கனவே எழுப்பப்பட்டுவிட்டது. மேல் மாடிக் கட்டிடத்திற்கு ரூ. 34,700 செலவில் வரைப்படமும், மதிப்பீடும் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. நிதித் துறைக்கும், பொதுப்பணித் துறைக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒப்புதல் வந்ததற்குப் பிறகு மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

Municipal High Schools in Madurai

*44. Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether it is a fact that most of the Municipal High Schools in Madurai are without basic amenities like black boards, wooden partitions between class rooms or clocks?